பிரம்மதேசம் ஊராட்சி மன்றத்தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை: திருமதி.E.மகேஸ்வரி எத்திராஜ் அவர்கள்,

கடித எண். 3 /2024

பொருள்: மனைப்பிரிவு –மரக்காணம் ஊராட்சி ஒன்றியம் -பிரம்மதேசம் ஊராட்சி (ம) கிராமம் கிராம சர்வே எண்.140/5,6A1,6A3, ஏக்கர் 3.37 செண்ட் (ச.மீ.13661) பரப்பளவு கொண்ட புதிய மனைப்பிரிவிற்கான இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடுதல் - சார்பு.

பார்வை: 1. அரசாணை எண்.79 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை UD(3) நாள்: 23.09.2020.

2. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் விழுப்புரம் மாவட்டம் - விழுப்புரம் அவர்களின் இணையதள வழி எண. ZWQGMU1J (வி.மா) எண்.40/2024, நாள்: 07.03.2024.

3. ஊராட்சி தீர்மான எண். 381 நாள்: 12.03.2024

4. தானப்பத்திரம் எண்.726/2024 & 841/2024, தேதி:26.02.2024 & 04.03.2024

5. ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா இணையவழி வங்கி கருவூல செலுத்துச்சீட்டு (இணையதளம் வாயிலாக) கட்டணம் ரூ.1000/- SBI Bank Villupuram Branch (Chelan Number:20240308008407 நாள்: 08.03.2024).

உத்தரவு:

மரக்காணம் ஊராட்சி ஒன்றியம், பிரம்மதேசம் கிராமம் சர்வே எண். 140/5,6A1,6A3, ஏக்கர் 3.37 செண்ட் (ச.மீ.13661) பரப்பளவு கொண்ட இடத்தினை புதிய மனைப்பிரிவுகளாக பிரித்திட பார்வை 1-ல் காணும் அரசாணையில் தெரிவித்துள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படியும், பார்வை எண்.2-ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் அவர்களின் நடவடிக்கையின் வாயிலாக ஒப்புதல் கடிதம் வரப்பெற்றுள்ளது.

பார்வை எண்.5-ல் காணும் விபரப்படி புன்செய் வகைப்பாட்டில் இருந்து மனையாக மாற்ற அனுமதி கோரும் இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகை நில பயன்மாற்ற கட்டணமாக உரிய அரசு தலைப்பில் ரூ.22,000/-SBI Bank Villupuram Branch (Chelan Number:20240308008325, நாள்: 08.03.2024) கிளையில் செலுத்தி அதற்குண்டான ஆவணங்கள் பின்வரும் விபரப்படி அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

வ. எண்.	விஸ்தீரணம்	சந்தை மொத்த மதிப்பு ரூ. (ச.மீ)	3% நிலமாற்று கட்டணம்
1	ஏக்கர் 3.37 செண்ட் (ச.மீ.13661)	706000	22000

நிபந்தனைகள்:

1. நிலம் உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானது என அறிவிக்கப்பட்டு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

2. மனைப்பரிவு அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கு நகர் ஊரமைப்புத்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அனுமதி பெற வேண்டும். மேலும் நீர்நிலைகள் மற்றும் அரசுக்கு சொந்தமான இடங்கள் என தெரியவந்தால் எவ்வித முன்னறிவிப்புமின்றி அனுமதி ரத்து செய்யப்படும்.

3. மேற்படி மனைப்பிரிவிற்கு ஊரக வளர்ச்சித்துறையில் இறுதி ஒப்புதல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதால் மனைப்பிரிவிற்கான இடம் உரிமம் தொடர்பாக வில்லங்கங்கள் ஏதெனும் இருப்பின் உரிய துறையினால் பரிசீலித்து முடிவு எடுக்க வேண்டும்.

4. மேற்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு, மரக்காணம் வட்டம், மரக்காணம் ஊராட்சி ஒன்றியம், பிரம்மதேசம் கிராமம், புதிய மனைப்பிரிவு சர்வே எண். 140/5,6A1,6A3, ஏக்கர் 3.37 செண்ட் (ச.மீ.13661) பரப்பளவில் அமைந்துள்ள 73 மனைகளுக்கு மட்டும் இறுதி ஒப்புதல் அளித்து உத்திரவிடப்படுகிறது.

E.Makeswari

ஊராட்சி மன்றத்தலைவர்,
பிரம்மதேசம்

தலைவர்
பிரம்மதேசம் ஊராட்சி
மரக்காணம் ஊராட்சி ஒன்றியம்

பெறுதல்:

DKP. ரமேஷ் B.L.,
கண்ணன் இல்லம்,
No.1, முதலாவது மெயின் ரோடு,
தனபால் நகர், திண்டிவனம்-604001
விழுப்புரம் மாவட்டம்.
செல்: 9677742070.

நகல்: உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) விழுப்புரம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

நகல்: உதவி இயக்குநர் (நகர் ஊரமைப்பு) விழுப்புரம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

நகல்: சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், மரக்காணம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

நகல்: வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், மரக்காணம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.